அருள்திரு மாணிக்கவாசகர் அருளிய

# திருவாசகம்

## படித்தால் என்ன கிடைக்கும்?

(தன்னிலை விளக்கம்)



மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை

உ

திருச்சிற்றம்பலம்

குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே!

# அருள்திரு மாணிக்கவாசக சுவாமிகள்

## அருளிச் செய்த

# திருவாசகம்




## படித்தால் என்ன கிடைக்கும்?

**திருவாசகத்தை அனைத்து அடியார்களுக்கும்,**
**அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு செல்வதற்கான ஒரு முயற்சி**

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந் – தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. திருவாசகம் 8.47.10

வெளியிடுவோர்
மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை, கும்பகோணம்.
அமுதன் விளம்பர நிறுவனம், கும்பகோணம்.

meet
A Truly Service Network

திருப்பணி.காம்

**நூல் தொகுப்பு & வடிவமைப்பு**

**த. சபாபதி** ஒருங்கிணைப்பாளர், திருப்பணி.காம்
நிறுவனர், மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை
33/17, நாகேஸ்வரன் சன்னதித் தெரு, கும்பகோணம் – 612001.
Web: www.thirupani.com / www.thiruvasagam.in

## நூல் விபரப் பட்டியல்

| | |
|---|---|
| நூல் பெயர் | : திருவாசகம் படித்தால் என்ன கிடைக்கும்? |
| பதிப்பு ஆசிரியர் | : த. சபாபதி |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பு | : முதல் பதிப்பு - செப்டம்பர் 2023 |
| பக்கங்கள் | : 102 பக்கங்கள் |
| பிரதிகள் | : 500 |
| நூல் அளவு | : 1 / 8 டெம்மி |
| தாள் | : 11.6 கி.கி. வெள்ளைத் தாள் – 60 gsm |
| எழுத்து | : 17 புள்ளி |
| நூல் வடிவமைப்பு | : **அமுதன் விளம்பர நிறுவனம்**<br>33/17, நாகேஸ்வரர் சன்னதித் தெரு,<br>கும்பகோணம் - 612001.<br>செல் : **94430 28343 / 91506 24921**<br>மெயில் : amudhanadvertising@gmail.com<br>வெப் : www.amudhan.in |
| வெளியீடு & புத்தகம் கிடைக்குமிடம் | : **மனிதவளம் & சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை**<br>33/17, நாகேஸ்வரர் சன்னதித் தெரு,<br>கும்பகோணம் - 612001.<br>செல் : **9488689102 / 9442440435 / 7305770130**<br>மெயில் : meetngo15@gmail.com<br>வெப் : www.meetngo.in<br>www.thiruvasagam.in / www.thirupani.com |
| விலை | : ரூ. **100**/- மட்டும் |


இந்த புத்தகத்திற்காக வழங்கப்படும் நன்கொடையானது அடுத்து அடுத்து வெளியாக உள்ள எங்களது புத்தகங்களுக்கு உறுதுணையாக இருக்கும். மேலும், எங்களால் இயன்ற சேவைகளைச் செய்வதற்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு : Name : Mankind & Environment Efflorescence Trust
AC No : **2654 01 0000 9676**
Bank : Bank of Baroda, Kumbakonam IFSC : BARB0KUMBAK ( '0' is Zero )
GPay : **94886 89102**

## வேண்டுகோள்

பெருமதிப்பிற்குரிய ஐயா / அம்மா அவர்களுக்கு,

வணக்கம்.

நெற்களஞ்சியத்தின் மணிமகுடமாகத் திகழும் கோயில் நகராம் கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் **மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை**யானது கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கடந்த 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட நாள்முதலாக பலதுறைகளைச் சார்ந்த அனுபவமிக்க சான்றோர்களின் வழிகாட்டுதலோடும், ஆலோசனைப் படியும் ரத்ததான முகாம்கள், புத்தக வெளியீடுகள், மரக்கன்றுகள் வழங்குதல், மாணவ, மாணவியர்க்குத் திறன்சார் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல், வாக்காளர் விழிப்புணர்வு, எய்ட்ஸ், தாய்ப்பால், கண்தானம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், கொரோனா பெருந்தொற்றுக் காலங்களில் பல்வேறு அமைப்பினருடன் இணைந்து களப்பணி ஆற்றுதல், ஏழை, எளிய மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவி, சமய, சமுதாய நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பது, பல்வேறு கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தி அதன் ஒரு பகுதியாகச் சாதனையாளர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்களைப் பெருமைப்படுத்தும் விதமாகப் பல்வேறு தலைப்புகளில் விருதுகளும் வழங்கி வருகின்றோம்.

எமது அறக்கட்டளையின் ஒரு பிரிவாகச் செயல்பட்டு வரும் **திருப்பணி.காம்** என்பது உழவாரம், ஆன்மீக நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல், கும்பாபிஷேக - திருப்பணிகளில் - திருத்தொண்டு புரிதல், ஆன்மீகச் சொற்பொழிவுகள், குரு பூஜை நிகழ்வுகள், திருவிழாக்கள், அனைத்து சமயப் பெருவிழாக்கள் நடத்துதல், திருவாசக முற்றோதல், அனைத்து சமயச் சான்றோர்களை அழைத்து ஆன்மீக அன்பர்களுக்கு அருளுரை மற்றும் பாராட்டு, நூல் வெளியீடுகள் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும்.


தற்போது, வாழ்நாள் பணியாக, **"மாணிக்கவாசகர் சொல்ல, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுதிய"** சிறப்புமிகு திருவாசக நூலை **இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்** என்ற முதன்மை இலக்குடன் அனைத்து அடியார்களுக்கும், அடுத்தடுத்த தலைமுறைக்கும் இடையீடின்றிக் கொண்டு செல்லும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அடியார்பெருமக்கள், ஆன்மீக அன்பர்களிடமிருந்து முன்பதிவுகள் பெறப்பட்டு முற்றோதல் குழுவினர், வயது முதிர்ந்தோர் என அனைவரும் எளிதில் படிக்கும் வகையில் பெரிய எழுத்துக்களில் **192** பக்கங்கள் கொண்ட திருவாசக நூல் முழுவதும் **ரூ. 20/-** என்ற சலுகை விலையில், **எங்கும் கிடைத்தற்கரிய மிகக்குறைந்த விலையில் 2022 அக்டோபர் மாதம்** தொடங்கி கொடுத்துவருகிறோம்.

## வேண்டுகோள்

**"திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்"** என்பது முதுமொழி, அதற்கேற்ப உள்ளத்தினை உருக்கி இறைவன்பால் மனத்தை ஒருநிலைப்படுத்தி உய்வுபெற வழிவகுக்கும் **தமிழ் கூறும் நல்லுலகு போற்றும்** திருவாசக நூலைத் தொடர்ந்து அச்சிட்டு வழங்கவும், **தமிழையும், சைவத்தையும் இருகண்களாக ஏற்றுப் போற்றக்கூடிய** அனைத்துத் தரப்பினருக்கும், அடுத்தடுத்தத் தலைமுறையினருக்கும், அனைத்து அடியார் பெருமக்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய நிலையில், பெரும் சவால்களைக் கடந்து மேற்கொள்ளப்பட்டு வரும் எங்களின் தொடர் முயற்சிக்கு தங்களால் இயன்ற பேராதரவு வழங்கியும் தொடர்ந்து எங்கள் திருப்பணி நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு பாதம் பணிந்து வேண்டுகிறோம்.

சமயம், சமுதாயத்துடன் இணைநேர்கோடாக இருந்து பணிபுரிந்து வருவது தாங்கள் அறிந்ததே.

உலக உத்தமர் காந்தியடிகளை நெறிப்படுத்திய **"கடையனுக்கும் கடைத்தேற்றம்"** என்பது போல திருவாசகம் உலகளாவிய நிலையில் அனைவரையும் எட்டி உய்தி தர வேண்டும் என்பதே எங்கள் முதன்மை இலக்கு.




நன்றி

மண்ணில் நல்லவண்ணம் வாழவும்,
எண்ணில் நல்ல கதி எய்தவும் உரிய நெறிநிற்க வேண்டும்
எனும் விருப்புடன்


**த. சபாபதி**
நிறுவனர், திருப்பணி.காம்
மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை
அலைபேசி : 9488689102 / 9442440435


Scan & Donate

vpa : manki94890@barodampay

Mankind & Environment Efflorescence Trust

நன்கொடைகளுக்கு :

Mankind & Environment Efflorescence Trust

A/C No : **2654 01 0000 9676**

Bank : Bank of Baroda, Kumbakonam

IFSC : BARB0KUMBAK ( '0' is Zero )

Paytm BHIM UPI PhonePe Google Pay

**94886 89102**

meet
A Truly Service Network

திருப்பணி.காம்
உழவாரம் - ஆலய திருப்பணிகள் - கும்பாபிஷேகம்



ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம்




திருவாசக நூல் வெளியீடு

வேண்டத் தக்க தறிவோய்நீ வண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே

# ஞானத்தைப் பரிசளியுங்கள்...

இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்!



## வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடிய சிறந்ததோர் பரிசு

ஒருவர் மண்ணில் நல்லவண்ணம் வாழப்
பரிசளிக்க விரும்புகிறீர்களா?
திருவாசகம் நூலைப் பரிசாக வழங்கி
அவர்கள் வாழ்வை வளமாக்குங்கள்



“பிறப்பு முதல் இறப்பு வரையிலும், இல்லங்களில் தனிநபர் வழிபாடு முதல் ஆலய வழிபாடு வரையில். அனைத்து மக்களும் அழிவற்ற பேரானந்தப் பெருவாழ்வு எய்திட வழிவகை செய்யும் அற்புத நூல் திருவாசகம்.”

அருள்திரு மாணிக்கவாசகர் சொல்ல இறைவன் சிவபெருமானே மானுட வேடம் தாங்கி வந்து எழுதிக் கையொப்பமிட்ட பெருமைக்குரிய ஒரே நூல்

## விரிந்து பரந்த அளவில், சிறப்பு விலையில் ( ரூ. 20/- ) அனைவருக்கும் திருவாசக நூல் வழங்கும் முன்னெடுப்பு

திருவாசகத்தின் விரிந்திட்ட பொருள்நலம், மனிதஇனம் எதிர்கொள்ளும் பல்வேறு வாழ்வியல் சவால்களுக்கு விடை தருகிறது. தமிழகம் மட்டுமன்றி இந்தியா, பிற அயல்நாடுகளில் உள்ள அடியார்கள், முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லம் ஆகியவற்றின் வழியாக அனைவரின் வாழ்வும் மேம்பாடு அடைய நம் அமைப்பின் மூலமாக திருவாசக நூலை ஒருவர்கூட விடுபடாத வகையில் வழங்கி வருகிறோம்.

**தொடக்கம் முதல் இதுவரையில் 5,200 பிரதிகள் வழங்கப்பட்டுள்ளது.**
**2023 க்குள் 50,000 பிரதிகள்** அச்சிட்டுக் கொடுத்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
உன்னதமான திருவாசகத்தைக் கொண்டு சேர்க்கும் முயற்சிக்கு எங்களுக்கு உதவுங்கள்.

## எங்கும், எல்லோர்க்குமாக !

**இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்**

**இலக்கினை அடையத் துணை நில்லுங்கள்**
தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி உதவுங்கள்

- 101 திருவாசகம் அருட்கொடை = Rs. 5051/-
- 51 திருவாசகம் அருட்கொடை = Rs. 2551/-
- 21 திருவாசகம் அருட்கொடை = Rs. 1051/-
- 11 திருவாசகம் அருட்கொடை = Rs. 551/-
- 1 திருவாசகம் அருட்கொடை = Rs. 51/-

Scan & Donate
vpa : manki94890@barodampay
Mankind & Environment Efflorescence Trust

**94886 89102**
Paytm BHIM UPI PhonePe Google Pay

9488689102
9442440435
thirupani.com@gmail.com

DONATE NOW



ஸ்ரீலஸ்ரீ தருமபுரம் ஆதீனம்



இல்லங்கள் தோறும் திருவாசகம்



ஸ்ரீலஸ்ரீ பேரூர் ஆதீனம்



ஸ்ரீலஸ்ரீ நாச்சியார்கோயில் ஆதீனம்



ஸ்ரீலஸ்ரீ வேளாக்குறிச்சி, செங்கோல் ஆதீனம்



ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள், காசி மடம்



ஸ்ரீலஸ்ரீ சூரியனார்கோயில் ஆதீனம்



தவத்திரு திருவடிக்குடில் சுவாமிகள்



சிவ. தாமோதரன் ஐயா

மேலும் விபரங்களுக்கு : www.thiruvasagam.in / www.thirupani.com

# மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

## பிறப்பும், பெருமையும் :

தண்ணார் தமிழளிக்கும் தன்பாண்டி நாட்டிலே சிவராச தானியாகிய மதுரையம்பதிக்கு வடகிழக்கே சுமார் பன்னிரண்டு மைலில் வைகையாற்றங் கரையில் வாயுவினால் பூசிக்கப் பெற்ற திருவாதவூரிலே அந்தணர் மரபில் வந்த சம்புபாதசிருதரும் சிவஞானவதியம்மையும் செய்த அருந்தவப் பேற்றால் மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் வாதவூரடிகள் தோன்றியருளினார். இவர் பதினாறாண்டிற்குள் கல்வி, கேள்விகளில் சிறந்து சைவ நூல்களையும், தத்துவ நூல்களையும், உலகியல் நூல்களையும் நன்கு அறிந்து பேரறிஞரானார். சைவ ஒழுக்கத்திலும், சிவனடியார் பக்தியிலும் இறை வழிபாட்டிலும் சிறந்து நின்றார். இவரது மேன்மையைக் கேட்டுணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் என்னும் அரசன் இவரை வருவித்து **'தென்னவன் பிரமராயன்'** என்ற பட்டத்தை வழங்கித் தனது அரசவைக்கு முதலமைச்சராக்கியதோடு திரண்ட செல்வமும் அளித்துச் சிறப்பித்தான். இவர் அறநெறி பிறழாமல் அரசுரிமை நடத்தி வந்தார். ஆயினும், அதில் பற்றின்றிப் பேரின்பப் பெருவாழ்வு பெற உண்மை உணர்த்தும் ஞானாசிரியனை நாடி நின்றார்.

## குதிரை கொள்ளாது குருவினைக் கொள்ளல் :

சோழநாட்டில் கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்பனைக்கு வந்துள்ள செய்தியைத் தூதர் மூலம் அறிந்த அரசன், முதலமைச்சராகிய வாதவூரரை அழைத்து ஆங்குச் சென்று நல்ல குதிரைகளை வாங்கி வருமாறு பணித்துப் பெரும் பொருள் கொடுத்துப் பரிசனங்களோடு அனுப்பினான். வாதவூரர் மீனாட்சியம்மையையும், சொக்கலிங்கப் பெருமானையும் வணங்கிக் கொண்டு புறப்பட்டுச் சோழ நாட்டுக் கடற்கரையை நோக்கிச் செல்லும் போது ஆவுடையார் கோவில் என வழங்கும் திருப்பெருந்துறை அடைந்தார். அப்போது ஆங்கொரு சோலையினின்றும் 'அர அர' என்ற சிவநாம முழக்கம் முழங்குவதைக் கேட்டு மெய்மறந்தார். ஒலியின் வழியில் விரைந்து சென்றார். சிவபெருமான் வாதவூரரை ஆட்கொள்ள வேண்டி ஒரு சிவ முனிவரின் திருக்கோலங் கொண்டு சிவகணங்கள் சூழ ஒரு குருந்த மரத்தடியில் அவர்களுக்குச் சிவஞானப் பொருளை உணர்த்திக்கொண்டிருந்தார்.

அதனைக்கண்ட வாதவூரர் காந்தம்கண்ட இரும்பே போல் ஈர்க்கப்பெற்றுத் தம் வசமிழந்து பரவசமாகிக் குருமூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். இறைவன் அவர்க்கு ஞான தீட்சை செய்து உண்மைப் பொருளை உபதேசித்தருளினார். அப்போது சிவஞானச் செல்வராக விளங்கிய வாதவூரர் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் குருமூர்த்திக்கு அர்ப்பணம் செய்து உள்ளக் கனிவோடு மாணிக்கமெனத் திகழ்ந்த வாசகத்தைப் பல பாடலாகப் பாடியருளினார். அதனைக் குருநாதர் கேட்டு மகிழ்ந்து வாதவூரருக்கு **'மாணிக்கவாசகர்'** என்ற திருநாமம் சூட்டித் திருக்கோயிற்பணி செய்யும்படி கட்டளையிட்டு அடியாரோடு மறைந்தருளினார்.

**ஆவணி மூலத்தில் குதிரை வருதல் :**

மாணிக்கவாசகர் இறைவன் ஆணைப்படி மெய்த் துறவியாகி தாம் கொண்டு வந்த பொருளையெல்லாம் பெருந்துறைப் பெருமானுக்குத் திருக்கோயில் எடுக்கும் திருப்பணிக்கு ஆக்கினார். பல நாட்கள் சென்றன. குதிரை வாங்கச் சென்ற வாதவூரர் பரிசனங்களுடன் வராமையைக் கண்ட பாண்டியன் ஆள்விட்டான். ஏவலர்கள் வாதவூரரது செயலைப் பற்றிப் பாண்டியனிடம் அறிவித்தனர். அரசன் சினந்து குதிரையுடன் வருமாறு ஓலை போக்கினான். வாதவூரர் பெருந்துறைப் பெருமானிடம் சென்று முறையிட்டார். இறைவன் "நாம் ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம்; நீ முன்னர்ச் செல்க. இம் மாணிக்கக் கல்லை அரசனிடம் கொடு" என்று கூறி ஒரு மாணிக்கக் கல்லையும் தந்தருளினார். அமைச்சர் அவ்வண்ணமே அரசனிடம் சென்று மாணிக்கக் கல்லைத் தந்து ஆவணி மூல நாளில் குதிரைகள் அனைத்தும் வரும் என்று அறிவித்தார். அரசன் மகிழ்ந்து எதிர்நோக்கி இருந்தான். ஆவணி மூலத்திற்கு முன்னாள் வரை குதிரைகள் வராமை கண்ட பாண்டியன் மாணிக்கவாசகரைச் சினந்து சிறையிட்டுத் துன்புறுத்தினான்.

அப்போது வாதவூரர், குருமூர்த்தியை நினைந்து நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்று மனவுறுதியுடன் இருந்தார். அடியவர் துயரம் பொறாத ஆண்டவன், காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி ஓட்டிக்கொண்டு தாமே குதிரைச் சேவகனாக ஆவணி மூலத்தன்று மதுரைக்கு வந்தருளினார். அதுகண்ட பாண்டியன் வாதவூரரைச் சிறை விடுத்துப் போற்றிப் புகழ்ந்தான். குதிரைத் தலைவராக வந்த சோம சுந்தரப் பெருமான் குதிரையின் இலக்கணங்களை அரசனுக்குக் கூறி கயிறு மாற்றிக் கொடுத்து குதிரைகளை ஒப்புவித்து மீண்டார்.

**பரிகள் நரிகளாக ஓடுதல் :**

அன்றிரவே, வந்த பரிகளெல்லாம் நரிகளாகி இன்னல்கள் பல விளைத்து ஊளையிட்டுக் கொண்டு காடு நோக்கி ஓடின. இச்செயலைக் கேட்ட பாண்டியன் மிக்க கோபங் கொண்டு மாணிக்கவாசகரை வைகைச் சுடுமண்ணில் முதுகில் கல்லேற்றி நிறுத்தித் தண்டிக்கச் செய்தான். வாதவூரர் துன்பம் பொறுக்கலாற்றாது எம்பெருமானை வேண்டினார்.

**ஆலவாய்ப் பெருமான் மண் சுமத்தல் :**

அன்பர்க்கு அருளும் ஆலவாய்ப் பெருமான் உண்மை விளங்கும் பொருட்டு வைகையாற்றிலே வெள்ளம் பெருகச் செய்தார். வெள்ளம் கரை கடந்து மதுரை நகர்க்குள் பாய்ந்தது. அதனைக் கண்டு மருண்ட பாண்டியன், குடிமக்களை வீட்டிற்கு ஒருவராக வந்து வைகைக் கரையை அடைக்குமாறு கட்டளையிட்டான். குடிமக்களுள் வயது முதிர்ந்த பக்தி நிறைந்த வந்தி என்னும் பிட்டுவாணிச்சிக்கு ஆள் இன்மையாள் சிவபெருமானே

மண் வெட்டும் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்து கரையடைக்கச் சென்றார். ஆனால் அவர் கரை அடைக்கவில்லை. மற்றைய ஏவலர்கள் அடைக்கும் கரையினைச் சிதைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடித் திருவிளையாடல் புரிந்தார். வந்தியின் பங்கு மட்டும் அடைபடாமல் இருந்ததைக் கண்ட பாண்டியன் வெகுண்டு, வந்தியின் கூலியாளாக வந்த சிவபெருமானைப் பிரம்பால் அடித்தான். சிவபெருமான் கரையினை அடைத்து மறைந்தருளினார்.

**வாதவூரர் தம் பதவியை நீத்துப் பற்பல தலங்களைத் தரிசித்தல் :**
பாண்டியன் அடித்தஅடி அவன் முதுகிலும் மற்றைய எல்லா உயிர்கள் முதுகிலும் பட்டது; அரசன் இறைவன் திருவிளையாடலையும், மாணிக்க வாசகர் பெருமையினையும் அறிந்து அவரைப் பிழை பொறுக்க வேண்டினான். மாணிக்கவாசகரும், பிழை பொறுத்துத் தம் அமைச்சர் பதவியை நீத்துத் திருப்பெருந்துறை, உத்தரகோச மங்கை, திருவாரூர், திருவிடைமருதூர், சீகாழி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களை வணங்கிப் பதிகங்கள் பாடிக்கொண்டு தில்லையை அடைந்தார்.

**தில்லையில் ஊமைப் பெண்ணை பேசவைத்தல் :**

மாணிக்கவாசகர் சிதம்பரத்திலே நடராசப் பெருமானை இடைவிடாது தரிசித்துப் பற்பல பதிகங்களைப் பாடிக் கொண்டிருக்கும் நாளிலே தில்லைவாழ் அந்தணர்களோடு வாதுக்கு வந்த புத்த குருவை இறைவன் ஆணையின்படி வாதில் வென்றார். ஊமைப் பெண்ணை பேசவைத்தார். புத்தகுரு முதலியோர் சைவராயினர்.

**தில்லைக் கூத்தனும், திருவாதவூரரும் :**

ஒருநாள் நடராசப் பெருமான் அந்தண வடிவு கொண்டு மாணிக்க வாசகரிடம் சென்று திருவாசகம் முழுமையும் ஓதச் செய்து, தமது ஓலைச் சுவடியில் அவற்றை எழுதிக் கொண்டு திருக்கோவையாரையும் சொல்லச் செய்து அதனையும் சுவடியில் எழுதிக் கொண்டு, **மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது** என்று கையொப்பமிட்டு அதனைக் கனக சபையின் பஞ்சாக்கரப் படியிலே வைத்துவிட்டு மறைந்தருளினார்.

**மாணிக்கவாசகர் இறைவனோடு இரண்டறக் கலத்தல் :**

மறுநாட் காலையில் தில்லை வாழந்தணர்கள் பஞ்சாக்கரப் படியில் சுவடியைக் கண்டு அதிசயித்துச் சுவடியில் அம்பலவாணன் கையெழுத்திட்டிருப்பதை உணர்ந்து மாணிக்கவாசகரிடம் சென்று சுவடியின் விபரம் அறிந்தனர். பின்னர் அவரை இப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகர் தில்லைவாழ் அந்தணர்களை அழைத்துக் கொண்டு பொற் சபையை அடைந்து தில்லைக் கூத்தனைச் சுட்டி, இவரே இத் திருவாசகத்திற்கு வாச்சியம் (பொருள்) என்று காட்டி சிவபெருமானது திருவடிச் சோதியில் இரண்டறக் கலந்தார். அந்நாளே ஆனி மக நன்னாளாகும்.



# நூலுக்குள் நுழையும் முன் !

**உங்களோடு சில வார்த்தைகள் .... !**

திருவாசகம் படித்தால் என்ன கிடைக்கும்? இது ஒரு தன்னிலை விளக்க நூலாக வெளிவருகிறது. ஆம், திருவாசகம் என்ற நூலில் முதல் பதிகமாக அமைந்துள்ள சிவபுராணம் மட்டும் ஏறத்தாழ 25 ஆண்டு காலமாகச் சொல்லிவந்த நிலையில், இறைவன் அருளால் எனக்கு என்னவெல்லாம் கிடைத்துள்ளது என்பதில் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் கிடைத்துள்ள அனுபவத்தையும், வாய்ப்புகளையும், இறையருள் அனுபவத்தையும், குருவருள் அனுபவத்தையும் இங்கே சிறு நூலாகத் தொகுத்து வழங்கியுள்ளேன். அப்படியென்றால் என் வாழ்நாளில் என்னவெல்லாம் கிடைத்துள்ளது என்பதை விவரிக்கக் காலம் போதாது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல சிவபுராணம் மட்டுமே சொல்லிவந்துள்ள எனக்கு, இத்தனையும் கிடைத்துள்ளது என்றால் திருவாசகம் முழுவதும் படித்தால்? என்னவெல்லாம் கிடைக்கும் என்பதைத் தங்கள் மேலான பார்வைக்கு விட்டுவிடுகின்றேன்.

சிவபுராணத்தில் ஒரு வரி, **"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்"** என்பதாகும். இதுநாள் வரையில் முழுப்பொருளையும்

உணர்வதற்கு வாய்ப்புக் கிடைக்க வில்லை. ஆனால் அவ்வப்போது அந்தப் பரம்பொருளை உணர்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

இந்த நூலானது முழுவதும் தற்பெருமை பேசுவதற்கோ, சுய புராணம் சொல்வதற்கோ, விளம்பரம் தேடுவதற்கோ எழுதவில்லை. இறைவன் அருள் வேண்டுவோர்க்கு எந்த நிலையிலும் அருள்புரியத் தயாராக உள்ளார். அதனைத் தெளிவுறச் சொல்வதற்கே இந்த நூல் வெளிவருகிறது. அதோடுகூட முழு நம்பிக்கையும், உண்மையான பக்தியும் கொண்டு இறைவனை வழிபடும் போது, இறைவன் “இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” என்ற வரிகளுக்கேற்ப, காக்கிறார் என்பதை 100% நம்புகிறேன்.

அத்தகைய நம்பிக்கை உங்களுக்குள் உருவாகுமேயானால், நிச்சயம் உங்கள் ஒவ்வொருவரையும் இறைவன் உடனிருந்து காப்பார். இங்குத் தெளிவுற நினைவில் கொள்ள வேண்டியது, நமது இன்பத் துன்பத்திற்கு முழுப் பொறுப்பும் நமது செயல்களால் விளைந்ததே என்பதை உணர்தலே. அப்படியென்றால் துன்பம் விளையாமல், இன்பத்தைத் தரக்கூடிய இறையருளை நாம் எப்போதும் மனத்தில் நிலையாகக் கொண்டால் ஒரு போதும் துன்பம் நேராது. அப்படியே மீறித் துன்பம் வரும் நிலை வந்தால் அதனிலிருந்து நம்மைக் காக்கும் பொறுப்பை இறைவனே ஏற்றுத் தீர்வு காண்பார். எண்ணற்ற நூல்களைப் படித்து இதனை நான் சொல்லவில்லை. எனது வாழ்வின் எல்லாத் தருணங்களிலும் இறைவன் என்னுடன் இருப்பதை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு தருணத்திலும் உணர்ந்து சொல்கிறேன். நான் சொல்வதை மிகச் சிலராலேயே உணர முடியும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், இதை உணர்வதற்கு முன்னர் என் வாழ்வில் நான் கடந்து வந்துள்ள கசப்பான, ஏமாற்றங்கள் நிறைந்த, தோல்விகள் நிறைந்த, துரோகங்கள் நிறைந்த, இழப்புகள் நிறைந்த, அவமானங்கள் நிறைந்த சூழ்நிலைகள் சொல்லில் அடங்காதவை.

மகிழ்ச்சியான தருணங்களில் எல்லாம், என்னால் நடந்தது என்றும், துன்பங்கள் வரும்போது இறைவனைத் திட்டுவதும், இந் நாளில் அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். இந்த மனநிலையே இறைவன் மீது நம்பிக்கையைக் குறைப்பதற்கான அடிப்படையாக இருப்பதை நன்கு உணர வேண்டும். அதனைத் தெளிவு

படுத்துவதற்கே இந்த நூலை எழுதியுள்ளேன். ஆம், இங்கே பின்வரும் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணற்ற நிகழ்வுகளில் எத்தகைய பேரானந்தத்தையும், பெருமையையும் கொடுத்தாரோ அதே சமயத்தில் அதற்கு இணையான துன்பத்தையும், துயரத்தையும், மன உளைச்சல்களையும் கொடுத்துள்ளார். காரணம், 'நான் செய்தேன்' என்ற அகந்தை உருவாகாமல் காத்து வருகிறார்.

அத்தகைய எல்லாச் சூழ்நிலையிலிருந்தும் இறைவன் என்னை எப்படிக் காத்தார் என்பதற்கு ஓர் உதாரணம். பூவிலிருந்து, பூவிற்கு வலிக்காமல், எப்படி தேனீ தேனைப் பிரித்தெடுக்கிறதோ, அப்படியே எனது அத்தனைத் துன்பங்களிலிருந்தும், இறைவன் காத்தார். காத்தும் வருகிறார்.

உலகியல் நோக்கில் பொருட்செல்வம் தான், ஒருவனைப் பெரியவனாக உருவகப் படுத்துகிறது என்றால், நான் அத்தகைய பெரிய செல்வந்தன் அல்ல. ஆனால், அருட்செல்வம் தான் பெரிது என்று சொன்னால் எனது வாழ்நாளில் இதுவரையில் எனக்குக் கிடைத்த அருட்செல்வத்தின் அடிப்படையில் நான் மிகப் பெரிய செல்வந்தன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், திருவருளும், குருவருளும் வாய்த்தமைக்கு அளவே இல்லை. இந்த நூலில் உள்ள எனது அனுபவங்களை நீங்களும் படித்து உணர்ந்து, அருட்செல்வராக நீங்கள் ஒவ்வொருவரும் ஆக வேண்டும் என்பதே எனது இந்நூலின் நோக்கமாகும்.

இனிவரும் காலங்களில் நீங்கள் ஒவ்வொருவரும் என்னைப் போன்று தங்கள் இறையனுபவங்களைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும். அத்தகைய வெளியீடுகள் பலருக்கும் திருவருளையும், குருவருளையும் பெற வழிகாட்டும் நூலாக அமைய வேண்டும் என்பதே எனது பேராசை. அப்படியான நூல்கள் வெளிவருமேயானால் நிச்சயம் இறைநம்பிக்கை ஓங்கி வளர்ந்து அனைத்து உயிர்களின் மீதும், அனைத்துத் தரப்பு மக்களின் மீதும் அன்பு செலுத்திப் போற்றக்கூடிய சாதி, மத, இன, மொழி பேதமற்ற நல்லதொரு சமுதாயம் உருவாகும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. அத்தகைய நம்பிக்கையோடு நூலுக்குள் வாருங்கள் எனப் பாதம் பணிந்து வரவேற்கின்றேன்...

# திருவாசகம் படித்தால் என்ன கிடைக்கும்?

**வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின்அல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.**

என்ற திருவாசகப் பாடல் வரிகள் இங்கே நினைவு கூரத்தக்கது. திருவாசகம் படித்தால் என்ன கிடைக்கும்? என்பது நமது உலகியல் தேவைக்கான கேள்வியாக மட்டும் இருந்துவிடக்கூடாது. ஆம், மணிவாசகப் பெருமான் சொன்னது போல நாம் **கேட்டது, கேட்டுக்கொண்டிருப்பது, கேட்க நினைப்பது மட்டுமன்றி நாம் எதிர்பார்க்காத பலவற்றையும்** இறைவன் அருளுவார்.

எந்தத் துன்பம் வந்தாலும், சோதனைகள் வந்தாலும், வாழ்வின் கடைசி நொடியிலும், உயிரே போகும் நிலைவரினும் கூட, இறைவன் கரங்கள் நம்மைப் பற்றிக் காக்கும் என்ற உறுதிப் பாட்டுடனும், முழு நம்பிக்கையுடனும் வழிபட்டால் அனைத்தும் அவனருளால் நன்றாகவே நடக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. உண்மையான வழிபாடும், முழு நம்பிக்கையும் இருந்தால் (உலகியல் தேவைகள் தவிர்த்து) என்ன வேண்டு கிறோமோ அனைத்தும் கிடைக்கும். இறைவன் சோதிப்பார். பயங்கர மாகச் சோதிப்பார். அதிபயங்கரமாகச் சோதிப்பார். சோதனைகள் யாவும் பொன்னைப் புடம் போடுவது போல், வைரக்கல்லைப் பட்டை தீட்டுவது போல், கருங்கல்லைச் சிலையாக வடிப்பது போல் நம்மில் உள்ள இறைத்தன்மையை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கும், ஆன்மாவைக் கடைத்தேற்றுவதற்கும் என்ற புரிதல் ஒன்றே எல்லாக் காலங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் நமது முழு நம்பிக்கை யாக இருக்க வேண்டும். எனவே, அத்தகைய நிலைப்பாட்டுடன் கூடிய சோதனையைக் கொடுக்கும் இறைவன் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். இந்தத் திடமான எண்ணம் உங்களில் இருக்கு மானால் நான் சொல்வதில் உள்ள உண்மை புரியும்.

முறையான வழிபாடும், முறையான வழிகாட்டுதலும், முறையான ஆன்மீக அனுபவமும் இல்லாமல், பொருள் புரியாமல், ஏதும் தெரியாமல், சரியான புரிதலின்றி சிவபுராணம் மட்டுமே தொடர்ந்து சொல்லி வந்த எனக்கு எண்ணற்ற அனுபவங்களை இறைவன் வழங்கியுள்ளார். அவற்றுள் திருவாசகத்தின் பொருட்டு கடந்த 2022 அருள்திரு. மாணிக்கவாசகர் குருபூஜை முதல் 2023 ஆகஸ்டு வரையிலான ஓராண்டு கால அனுபவங்களை மட்டும் இங்கேப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளேன். காரணம் சிவபுராணம் ஒன்று மட்டுமே படிக்கின்ற போது ஓராண்டு காலகட்டத்தில் மட்டும் கீழ்க்கண்ட வாய்ப்புகள் அனைத்தும் கிடைத்துள்ளது என்றால், திருவாசகம் முழுமையையும் உண்மையான பக்தியுடனும், முழு நம்பிக்கையுடனும் படித்தால் நம் வாழ்நாள் முழுவதும் என்ன வெல்லாம் கிடைக்கும் என்பதைத் தயவுசெய்து மனதில் எண்ணிப் பாருங்கள்! இந்தப் பட்டியலும், அதைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள நீண்டதொரு புகைப்படத் தொகுப்பும் நான் பெற்ற அனுபவங்களை நீங்களும் புரிந்துகொள்ளவே. அதுவன்றி **'நான் செய்தேன்'** எனும் செருக்கினால் அல்ல.

மன உறுதியுடன் சொல்கின்றேன். திருவாசகத்தை உயிர் மூச்சாகக் கருதி முற்றோதல் செய்கின்றவர்கள், இறைவன் மீது தீராத பற்றுக் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் உழவாரப்பணி செய்கின்ற வர்கள், தலயாத்திரை செய்பவர்கள், வழிபாடு செய்பவர்கள், இறை சிந்தனையுடன் மக்கள் சேவை செய்பவர்கள், இறைத் தொண்டு செய்பவர்கள், பூத்தொண்டு செய்பவர்கள், தானம் வழங்குபவர்கள், முத்தமிழால் வழிபாடு செய்பவர்கள் என அவரவர் முறைக்கு ஏற்றபடி வழிபாடு செய்வோருக்கு இறைவன் உடன் இருந்து வழிகாட்டுவார். இறைநிலை எய்திட அருள்வார் என்பதில் ஐயமில்லை. அதற்கு நாம் செய்ய வேண்டுவதெல்லாம் எனது சிற்றறிவிற்கு தெரிந்த அளவில் இறைவனை நாம் அனைவரிலும், அனைத்து உயிர்களிலும், அனைத்துச் செயல்களிலும், அனைத்து நேரங்களிலும், அனைத்து எண்ணங்களிலும், அனைத்து இடங்களிலும் காண்பதற்கும், உணர்வதற்கும் பழகிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் போது

நான் என்ற அகந்தை அழிந்துபோவதையும், நான் என்ற அகந்தை முன் வந்து தலைக்கனம் ஏறும் சூழல் வரும் போதெல்லாம் இறைவன் அகந்தையை அழிக்கும் பல்வேறு அனுபவங்களைக் கொடுத்து, சமநிலையில் வழிநடத்துவதையும் நன்கு உணர்கின்றேன். அந்த நேரத்தில் நாம் இறைவனைத் தூற்றுவதைக் காட்டிலும் நமது அகந்தையை நமக்கு உணர்த்தி வழிநடத்துகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அப்படியாக துரோகம், பொறாமை, ஆணவம், அகந்தை, தீய எண்ணங்கள், தீய பழக்கங்கள், தீய செயல்பாடுகள் என அனைத்திலிருந்தும் நம்மைப் பிரித்து தனியே வைத்துக் காப்பதையும் நன்கு உணர்கின்றேன்.

கீழ்க்கண்ட தகவல்களைப் பகிர்வது, நான் செய்தேன், நாங்கள் செய்தோம் என்று பெருமை பேசுவதற்கு அன்று. இதைப் போன்ற பன்மடங்கு சாதனைகளையும், அனுபவங்களையும் தாங்கள் ஒவ்வொருவராலும் பெற இயலும் என்பதை மீண்டும் மீண்டும் ஆணித்தரமாகச் சொல்வதற்காகவே ஆகும். இறைவன் இந்தச் சிறியேனுக்கே இத்தகைய வாய்ப்பை வழங்கியுள்ளார் என்றால்?.....

51 பதிகங்கள் கொண்ட திருவாசகத்தில் முதல் பதிகம் படித்துவரும் எனக்கே இத்தகைய பேறு கிடைத்திருக்கின்ற தென்றால்... திருவாசகம் முழுதும் – 51 பதிகங்களையும் – படிக்கும் உங்கள் ஒவ்வொருக்கும் என்னவெல்லாம் கிடைக்கும்? அப்பப்பா! அதை வரையறை செய்து சொல்லி முடித்துவிட முடியாது. அப்படிப்பட்ட பேரானந்தம் நீங்கள் ஒவ்வொருவரும் பெற வேண்டி, **இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்** வழங்கி வருகின்றோம். இதற்கு அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி வருகின்றோம். நன்றி.

- ★ மொத்தத்தில் **25,000** என்ற முதற்கட்ட இலக்கில் **5,200** பிரதிகள் திருவாசக நூல்கள் இதுநாள் வரையில்

அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது. **தற்போது மீண்டும் அச்சுப் பணிகள் தொடங்கியுள்ளோம்.**

★ 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாணிக்கவாசகர் குரு பூஜையை முன்னிட்டு தொடர்ந்து இரண்டு வாரங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவபுராணம் ஒப்புவித்தல் போட்டிகள் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவிகள், இளைஞர்கள், பெரியோர்களுக்குச் சான்றிதழ்களும், பதக்கங்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

★ விழாவில் வாமதேவ ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு கையடக்க அளவு சிவபுராணம் மற்றும் பக்திப்பதிகங்கள் அடங்கிய நூலை வெளியிட்டு அருளாசி வழங்கினார்கள். முதற்பிரதியை அன்னை தியானமையம் மாதாஜீ ஜெயஸ்ரீ அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

★ சிவபுராணம் மற்றும் பதிகங்களுடன் கையடக்கப் பிரதிகள் இதுவரையில் **7,000** பிரதிகள்அச்சிட்டு பல்வேறு மாவட்டங்களில் உள்ள பக்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகைபுரிந்த சிவ பக்தர்கள் முன்னிலையில் 2022 அக்டோபர் மாதம் திருவிடை மருதூரில் திருவாசகத் திருவிழா நடைபெற்றது.

★ திருவிடைமருதூரில் **திருவாசகத் திருவிழா** என்ற பெயரில் **இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்** நூல் வெளியீடு, **இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம்** நூல் வழங்குதல், பன்னிரு திருமுறை வீதியுலா, அருள்திரு. திருநாளைப்போவார் குருபூஜை, திருவாசக முற்றோதல் உள்ளிட்ட நிகழ்வுகள் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது.

★ திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலிலிருந்து சிவமே நிலவும் வீதிகள் வழியாக கயிலாய வாத்தியங்கள் முழங்க பன்னிரு திருமுறை பல்லக்கில் விழா மேடைக்கு எழுந்தருளச் செய்யப் பெற்றது.

★ திருக்கயிலாய பரம்பரைப் பேரூராதீன 25 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் விடைக்கொடியேற்றி வைத்தும், கோபூஜை செய்தும், அருள்திரு. திருநாளைப்போவார் குருபூஜை செய்வித்தும், விழாவைத் தொடங்கி வைத்தும் ஆசியுரை வழங்கினார்கள்.

★ திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பெற்றுள்ள - 192 பக்கங்கள் கொண்ட ரூ.20/- என்ற குறைந்த விலையிலான **இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசக நூலை,** வெளியிட்டு அருளாசி வழங்கினார்கள்.

★ திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் **இல்லங்கள்தோறும் எழுந்தருளும் திருவாசகம்** நூலை அகில பாரதிய சந்நியாசிகள் சங்கம் சுவாமி கோரக்ஷானந்தா அவர்களுக்கு வழங்கி நிகழ்வைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள்.

★ திருவிடைமருதூர் விழாவில் திருப்பணி.காம் சார்பில் முதன் முறையாக திருவாசக முற்றோதல் நடைபெற்றது. திருவிடை மருதூர் சிவத்திருமதி. ஹேமலதா அவர்களின் திருவாசக முற்றோதல் குழுவினர் தலைமையேற்று நடத்திக் கொடுத்தது சிறப்பாக அமைந்தது.

★ சைவ ஆதீனங்கள் பதினெட்டுள் ஒன்றாகத் திகழும் திருக்கயிலாய கந்த பரம்பரை நாச்சியார்கோயில் ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசுப்ரமணிய தேசிகர் அவர்கள் திருவாசக முற்றோதலில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

★ திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மற்றும் திருக்கயிலாய பரம்பரை பெருங்குளம் செங்கோல் ஆதீனம் 103 ஆவது குருமகாசந்நிதானம்ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஒருசேர திருவாசக முற்றோதல் விழாவில் கலந்துகொண்டு அருளாசி வழங்கியும் , திருவாசக முற்றோதலை முழுமை செய்து பூஜைகள் நடத்தியும், பக்தர்களுக்குத் திருவாசக நூல் வழங்கியும், அருளாசி வழங்கியும் விழாவை சிறப்பித்தார்கள்.

★ திருப்பனந்தாள் காசித்திருமடம் 21 ஆவது அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், **திருவாசகத்திற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட www.thiruvasagam.in என்ற இணையதளத்தைத்** தொடங்கி வைத்து அருளாசி வழங்கியருளினார்கள். நிகழ்வின் போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், இளவரசு, ஸ்ரீமத் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் உடனிருந்தார்கள்.

★ தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா அவர்கள் புகழ்பாடும் வகையிலும், திருமுறைக்காக அவர்கள் செய்திட்ட தொண்டினை நினைவுகூரும் வகையிலும் திருவாசக முற்றோதல் ஞானவேள்விப் பெருவிழா, தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா நூற்றாண்டு விழா, அமுது அடி யடைந்த அன்பரின் அருந்தமிழ் வாய்மொழி – கருத்தரங்கம்

ஆகியவற்றை உள்ளடக்கிய முப்பெரும் விழாவாக நடத்தப்பெற்றது.

★ காலையில் கும்பகோணம், இராகுகால காளியம்மன் கோயில் என்று போற்றப்படும் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக் கோயிலில் திருவாசக முற்றோதலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. திருவாசக முற்றோதல் நிகழ்வை சிவத்திரு. சாக்கோட்டை பி.ஏ.பி சண்முகம் அய்யா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். முற்றோதல் நிகழ்வைத் திருவிடைமருதூர் சிவத்திருமதி. ஹேமலதா அவர்களின் திருவாசக முற்றோதல் குழுவினர் நிகழ்த்தினார்கள்.

★ திருவாசக முற்றோதல் நிறைவில் கும்பகோணம், ஜோதிமலை இறைபணி திருக்கூட்டம் நிறுவனர் தவத்திரு. திருவடிக்குடில் சுவாமிகள் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்கள்.

★ தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழாவில் தருமபுரம் ஆதீனப்புலவர், ஸ்ரீ காசித்திருமடத்துப் புலவர், திருவாவடுதுறை ஆதீனத்து அடியார்கள் முன்னிலையில் ஓதுவாமூர்த்திகளுக்கு சிறப்பு செய்யப்பட்டு திருவாசக நூல்கள் வழங்கப்பட்டன.

★ தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழாவில் கல்லூரி மாணவ, மாணவியரின் கருத்தரங்கம் நடத்தப்பட்டு அவர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டு திருவாசக நூல்கள் வழங்கப்பட்டன. கருத்தரங்கத்தில் சிவத்திரு. குவைத் வாசு. ஆரூர். இராமநாதன் கலந்துகொண்டது சிறப்பிற்குரியது.

★ கும்பகோணம், வீர சைவப் பெரியமடத்தில் இரண்டாவது முறையாக நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வை குழந்தைகள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். கலந்துகொண்ட அனைவருக்கும்

திருவாசக நூல் வழங்கப்பட்டது.

★ கும்பகோணம் வீரசைவப் பெரியமடம், அருள்மிகு அகோர வீரபத்திரர் திருக்கோயிலில் உழவாரப்பணி நடத்தப்பட்டு அனைவருக்கும் திருவாசகம் நூல் வழங்கப்பட்டது.

★ கும்பகோணம், திம்மக்குடி கிராமத்தில் அமைந்துள்ள அன்னை ஆதுரகத்தில் (முடிவுநிலைப் புற்றுநோயளிகளின் ஆதரவு இல்லம்) நிறுவனர் தலைவர் சிவத்திரு. டாக்டர். எஸ். தியாகராஜன் அவர்கள் வாய்ப்பு வழங்கியமையால் மூன்றாவது முறையாகத் திருவாசகம் முற்றோதல் நடத்தப் அனைவருக்கும் திருவாசகம் நூல் வழங்கப்பட்டது.

★ கும்பகோணம், பட்டீஸ்வரம் திருக்கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள திருச்சத்திமுற்றம் அருள்மிகு சிவக்கொழுந்தீசர் திருக்கோயிலில் உழவாரப் பணி செய்யவும், உழவாரப் பணியை ஒருங்கிணைக்கவும் வாய்ப்பு கிடைத்தது. உழவாரப் பணியில் மூன்றுக்கும் மேற்பட்ட உழவாரப்பணிக் குழுவினர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு உழவாரப்பணிகள் மேற்கொண்டனர். உழவாரப்பணி நிறைவில் குழு ஒருங்கிணைப்பாளர்களுக்குத் திருவாசக நூல்கள் வழங்கப்பட்டன.

★ முதன்முறையாகக் கோயில் மாநகராம் திருக்குடந்தையில் கயிலைப் புனிதர். திருவாசகச் சித்தர், சிவ. தாமோதரன் அய்யா அவர்களின் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சியானது **திருவாசகத் தேனமுதம்** என்ற முன்னெடுப்போடு மகாமகக் குளக்கரை அருகில் அமைந்துள்ள ஹரிதா மஹாலில் நடைபெற்றது.

★ திருக்கயிலாய ஸ்ரீ கந்த பரம்பரை வாமதேவ ஸ்ரீ சிவாக்கர யோகிகள் மடம் சூரியனார்கோயில் ஆதீனம் 28 ஆவது

குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சிவபூஜை நிறைவில் கலந்து கொண்டு வழிபாடாற்றியும், பன்னிரு திருமுறை பக்தர்கள் ஏந்திக் கொண்டு மகாமகத் திருக்குளத்தை வலமாக வரும் நிகழ்வில் கலந்து கொண்டும், திருவாசக முற்றோதல் நிகழ்வைத் தொடங்கி வைத்தும் அருளாசி வழங்கினார்கள்.

★ **திருவாசகத் தேனமுதம்** நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான சிவ பக்தர்களுக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்பட்டது.

★ திருவாசகத் தேனமுதம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான சிவபக்தர்களுக்கும், ஆன்மீக அன்பர்களுக்கும் அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட்டது.

★ அய்யா அவர்கள் திருக்குடந்தையில் தொடர்ந்து மூன்று தினங்கள் தங்கியிருந்து திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி யினை நடத்தியது மிகவும் குறிப்பிடத்தக்கது.

★ வாமதேவ ஸ்ரீ கந்த பரம்பரை சிவாக்கர யோகிகள் மடம், சூரியனார்கோயில் ஆதீன ஸ்ரீகார்யம் ஸ்ரீ சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆசிபெறவும், திருவாசக நூல் வழங்கவும் வாய்ப்பு கிடைத்தது.

★ விழுப்புரத்தில் நடைபெற்ற உலக சிவனடியார் திருக்கூட்டம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. அப்போது சிவ. ஈஸ்வரன் ஐயா, ஓய்வுபெற்ற ஐஜி பொன். மாணிக்கவேல் ஐயா உள்ளிட்டோரைச் சந்திக்கவும், திருவாசக நூல் வழங்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

★ குடவாசல் அருகில் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டு குடமுழுக்கு நடைபெற்ற திருக்கோயிலில் குடமுழுக்கு நடத்தி வைத்த சிவ

பக்தர்களுக்கு, விழாக்குழுவினர்க்கு திருவாசகம் நூல் வழங்கப்பட்டது.

- ★ முதல் முறையாக வெளியூரில் – திருவாரூர் அருகில் அமைந்துள்ள தேவர்கண்டநல்லூரில் திருவாரூர் சிவத்திரு. ஆரூர். வாசு. இராமநாதன் அவர்கள் இயற்றிய **ஐம்முகத்தான் அந்தாதி** நூல் வெளியீட்டு விழாவினை ஒருங்கிணைத்து நடத்தக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

- ★ விழாவில் வாமதேவ ஸ்ரீ கந்த பரம்பரை சிவாக்கரயோகிகள் மடம், சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையின்வண்ணம் ஸ்ரீகார்யம் ஸ்ரீ சுவாமிநாத தேசிக சுவாமிகள் அவர்களும், ஜோதிமலை இறைபணித் திருக்கூட்டம் நிறுவனர் தவத்திரு. திருவடிக்குடில் சுவாமிகள் அவர்களும் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்கள்.

- ★ குருவருளால் வழிபாட்டிற்கு ஏதுவாக சிவலிங்கமும், நந்தி யெம் பெருமானும் கிடைக்கப்பெற்றது.

- ★ சிவபக்தர் ஒருவர் உதவியால் ஹிமாச்சல் பிரதேசத்திலிருந்து 10008 ருத்திராட்சம் கிடைக்கப் பெற்றது.

- ★ இறைவன் பெருங்கருணையினால் சிவபக்தர் ஒருவர் உதவியால் மூட்டை மூட்டையாகத் திருநீறு கிடைக்கப்பெற்றது.

- ★ அருள்திரு. மாணிக்கவாசகர் திருமேனி வழிபாட்டிற்காக வடிக்கப்பட்டு வருகின்றது.

- ★ எண்ணற்ற சிவபக்தர்கள் சிவபூஜை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

★ வாமதேவ ஸ்ரீ கந்த பரம்பரை சிவாக்கர யோகிகள் மடம், சூரியனார்கோயில் ஆதீனத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி முடிவில் சிவபக்தர்களுக்கு திருவாசக நூல் வழங்கப்பட்டது.

★ கும்பகோணம் வீரசைவப் பெரியமடத்தில் அருள்திரு. மூர்க்க நாயனார் குருபூஜையும், இந்திய அரசியல் சாசன தின விழாவும், திருவாவடுதுறை ஆதீனப் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய குடந்தைப் புராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

★ முதன்முறையாக இராஜராஜ சோழன் சதயநாள் விழாவில் குடும்பத்துடன் கலந்துகொள்ளும் வாய்ப்பும், அதுசமயம் நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வில் சற்றும் எதிர்பாராத விதமாக “**நானேயோ தவம் செய்தேன்**” என்ற வரிகள் அடங்கிய பதிகம் முழுவதும் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

★ உடையாளூரில் அமையப்பெற்றுள்ள இராஜராஜசோழன் சமாதிக்கு சென்று திருமுறை கண்ட சோழனின் சமாதியில் முதன்முறையாக வழிபாடு செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

★ அனைத்து நிகழ்ச்சிகள் வாயிலாகவும், சில இடங்களில் புதிதாக திருவாசக முற்றோதல் தொடங்குவோருக்கும் சேர்த்து இதுவரையில் ஏறத்தாழ **ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட திருவாசக நூல்கள் விலையின்றி** வழங்கப்பட்டுள்ளது.

★ மதுரை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், துழாவூர் ஆதீனம், திலகவதியார் ஆதீனம் போன்ற குருமகாசந்நிதானங்களின் தரிசனம், எண்ணற்ற துறவியர் பெருமக்களின் ஆசிகள் கிடைக்கப்பெற்றது. ஆன்மீகச் சான்றோர்களின் அறிமுகம் கிடைக்கப்பெற்றது.

★ அகில பாரதீய சந்நியாசிகள் சங்கத்தின் தவத்திரு. சுவாமி. இராமானந்தா அவர்கள், தவத்திரு. சுவாமி. வேதானந்தா அவர்களின் ஆசிகள் பெறவும், திருவாசக நூல்கள் வழங்கவும் வாய்ப்புகள் கிடைத்தன.

★ முதன்முறையாக ஆடி அமாவாசை தினத்தில் நடைபெற்ற திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் நடைபெற்ற அப்பர் கயிலாயக் காட்சி நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

★ அதுசமயம் படிப்பதற்கும், வழிபடுவதற்கும் ஏதுவாக தருமபுரம் ஆதீனம் வெளியீடான பன்னிரு திருமுறை நூல் கிடைக்கப் பெற்றது.

★ எண்ணற்ற திருவிளக்கு பூஜைகளை ஒருங்கிணைத்து நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் பக்தர்களுக்கு சிவபுராணம் கையடக்கப்புத்தகம் வழங்கி அவர்களையும் சிவபுராணம் சொல்லச் செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

★ தர்ம ரக்ஷண ஸமிதியில் இணைந்து அம்மன் வழிபாடு, கோபூஜை, கூட்டுப்பிரார்த்தனை, திருவிளக்கு பூஜைகள் நடத்தக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

★ திருவிடைமருதூர் பஞ்சரதத் தேரோட்டத்தில் முதன்முதலாக முழுமையாகக் கலந்து கொள்ளவும், தர்ம ரக்ஷண ஸமிதி மூலமாக ஸ்ரீ விநாயகர் தேர், ஸ்ரீ முருகன் தேர் ஆகிய தேர்களுக்கு தன்னார்வலராக இருந்து பணி செய்யவும் வாய்ப்பு கிடைத்தது.

★ மறுமண சந்திப்பு நிகழ்ச்சி நடத்தி அதன் மூலமாக இருவருக்கு புதிய வாழ்க்கை அமைவதற்கு வழிவகை செய்யப்பட்டது.

★ புதுதில்லியில் பாரதப் பிரதமர் மாண்புமிகு. நரேந்திர மோடி அவர்களால் திறக்கப்பட்ட புதிய பாராளுமன்ற திறப்பு விழாவினையொட்டி தில்லித் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற ஆதீனகர்த்தர்களின் அருளாசி வழங்கும் நிகழ்ச்சியில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் என்ற அடிப்படையில் கலந்துகொள்ளவும், தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் அவர்களுக்கு திருவாசகம் நூல் வழங்கவும் வாய்ப்பு கிடைத்தது.

★ புதுதில்லியில் இந்நாள், முன்னாள் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், ஆன்மீகச் சான்றோர்களைச் சந்தித்து திருவாசகம் நூல் வழங்கும் வாய்ப்புக் கிடைத்தது.

★ சுவாமி விவேகானந்தர் சிக்காகோ சொற்பொழிவு ஆற்றிய 125 வது ஆண்டு விழாவினை முன்னிட்டு கும்பகோணத்தில் தங்கியிருந்து **எழுமின்! விழிமின்!** என்று வீரமுழக்கமிட்ட தினத்தையும் நினைவு கூரும் வகையில் தஞ்சாவூர் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் சார்பில் நடைபெற்ற சிலை திறப்பு விழாவில் தன்னார்வலராக சேவை செய்ய சுவாமி விமூர்த்தானந்த மகராஜ் அவர்கள் குருவருளால் வாய்ப்பு கிடைத்தது.

★ இதுவரையில் எண்ணற்றோருக்கு சிவபுராணத்தின் மகிமையை எடுத்துக் கூறி நம்பிக்கையுடன் வழிபாடு செய்த ஒரு சிலருக்குக் குழந்தை பாக்கியம், திருமணம் நடை பெற்றுள்ளது, உத்தியோகம் கைக்கூடியுள்ளது, ஒரு சிலர் மது வின் பிடியிலிருந்து விலகியுள்ளார்கள், ஒரு சிலருக்கு பல நாள் குடும்ப பிரச்சினைகள் முடிவுக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

★ மாணவ, மாணவிகள், இளைஞர்கள், இல்லத்தரசிகளுக்கு, நாயன்மார்கள் வரலாறை எடுத்துரைக்கும் மிகப்பெரிய வாய்ப்பு பண்பாட்டுப் பயிற்சி வகுப்பு நடத்துவதன் வாயிலாகக்

கிடைத்தது.

- ★ கோயில் மாநகரம் கும்பகோணத்தில் ஆண்டுதோறும் மாசி மகப் பெருவிழாவின் போது நடைபெறும் அகில பாரதீய சந்நியாசிகள் நடத்தக்கூடிய ஆரத்திப் பெருவிழாவில் முதன் முதலாகக் கலந்து கொள்வதற்கும், இயன்ற சேவைகளைச் செய்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது.

- ★ சூரியனார்கோயில் ஆதீனத்தில் நடைபெற்ற ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ சிவாக்கர சுவாமிகள் குருபூஜை விழாவில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது.

- ★ ஆதீன குருமுதல்வர் உற்சவமூர்த்தி வீதியுலா நிகழ்வில் முதன்முதலாக பல்லக்கைத் தூக்கிக் கொண்டு வலம் வரக்கூடிய (இதுவரை வாரை பிடித்துச் சுவாமி தூக்கும் வாய்ப் புகிடைத்ததில்லை) மிகப்பெரும் பாக்கியமும் கிடைத்தது.

- ★ பல ஆண்டுகாலம் பலரும் சொல்லக் கேள்விப்பட்ட திருச் செங்காட்டங்குடி சிறுத்தொண்டநாயனார் அமுதுபடையல் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில், கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்வதற்கும், திருவிளையாடலைக் காண்பதற்கும் முதன்முதலாக வாய்ப்பு கிடைத்தது

- ★ திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் ஒரு சேரப் பெறுவதற்கான மிகப்பெரிய வாய்ப்பு கிடைத்தது.

- ★ ஸ்ரீ சண்டிகேஸ்வர நாயனார் குருபூஜை தினத்தில் முதன் முறையாக திருப்பனந்தாள் அருகே அமைந்துள்ள அவருடைய அவதாரத் தலத்திற்குச் சென்று தரிசனம் செய்வதற்கு முதன் முறையாக வாய்ப்பு கிடைத்தது.

★ ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாக தடைபட்டிருந்த ஸ்ரீ வீரமாகாளியம்மனுக்கு பால்குடம் எடுக்கும் வாய்ப்பு இத்தனை வருடங்கள் கழித்து மீண்டும் கிடைக்கப்பெற்றது.

★ ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக வெறும் கனவாகவே இருந்து வந்த திருவொற்றியூர் வள்ளலார் மடம் , பட்டினத்தார் ஜீவசமாதி மற்றும் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் ஜீவசமாதி மேலும் எண்ணற்ற ஜீவ சமாதிகளை ஒரு சேர தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

★ ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாடப் பெற்ற திருமீயச்சூர் ஆலயத்தைத் தரிசிக்கும் வாய்ப்பும், அது சமயம் வேளாக் குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய குருவருளைப் பெறுவதற்கும் ஒரு சேர வாய்ப்பு கிடைத்தது.

இன்னும் பற்பல நிகழ்வுகள், அனுபவங்கள், பங்கேற்புகள், வாய்ப்புகள் புகைப்படத் தொகுப்பாக வழங்கப்பட்டுள்ளன. அனைத்து முயற்சிகளுக்கும் என்னோடு துணைநின்ற திரு வருளுக்கும், குருவருளுக்கும், ஆன்மீகச் சான்றோர்களுக்கும், பக்தர் களுக்கும் நன்றி மலர்களைத் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

**தன்னையே மறந்து, தன்னிலை உணர்ந்து,**
**இறைவனை நினைந்து, திருவடி அடைவோம்!**



## எனக்கும் இதுபோன்ற வாய்ப்புகள் சாத்தியமா?

சாத்தியமே! பணம், பொருள், ஆள்பலம் வைத்துக் கொண்டு செய்யக்கூடிய அத்தனை செயல்பாடுகளையும் உண்மையான பக்தி, தொண்டுள்ளம் கொண்ட ஒரு சிலரை மட்டுமே கொண்டு, உடன் நிறுத்தி எத்தனைப் பெரிய நிகழ்வுகளை இறைவன் நிகழ்த்தியுள்ளார் என்பது அவருடைய பேரருட் கருணையே ஆகும். இத்தனையும் கொடுத்த இறைவனுக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் கொடுத்து உண்மையான அன்பைக் கொண்டு வழிபட்டால், அவர் நம் உடனிருந்து எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்துவார் என்பதை மீண்டும் மீண்டும் உறுதியோடும், எவ்விதத் தயக்கமும் இன்றியும் தெளிவுபட தெரிவித்துக் கொள்கின்றேன். இதனைத் தெரிவிப்பதற்குக் காரணம், என்னால் இது சாத்தியம் என்றால், உங்களைப் போன்ற உண்மையான பக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் இதைப் போல பன்மடங்கு சாத்தியமாகும் என்பதை உணர்த்துவதற்கே.

## இத்தகைய அனுபவங்கள் எளிதில் கிடைத்துவிடுமா?

எதுவும் எளிதல்ல! ஆதியும், அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியல்லவா? அவர். பல்லோரும் பலகாலம் தவமிருந்து அடைய விரும்பும் பரம்பொருளாயிற்றே. அப்படிப்பட்டவர் அருளைப் பெறுவது அத்தனை எளிதல்ல. அவர் அருளைப் பெற நினைத்தாலோ அவர் மீது பற்றுக் கொண்டு இது போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டாலோ ஏற்படும் சோதனைகள், சங்கடங்கள், கடன்கள், பிரச்சனைகள், கோளாறுகள், துரோகங்கள் யாவும் சொல்ல முடியாத அளவிலேயே இருக்கும்.

அதற்குக் காரணம், நம்மை செம்மைப்படுத்தி உலகியல் உண்மையை உணர்த்தி நம் உள்ளிருக்கும் உண்மைத் தன்மை யையும் நம் பிறவியின் நோக்கத்தையும் மீண்டும் மீண்டும் நமக்கு நினைவுபடுத்துவதற்கு என்ற புரிதல்இங்கே குறிப்பிடத்தக்கது. காரணம், அப்படியான நிகழ்ச்சிகள்நடைபெறும் போதெல்லாம்

பலருடைய உண்மை முகத்தை நமக்குத் தெளிவாக இறைவன் உணர்த்தி, நம்மை பேராபத்திலிருந்தும், துரோகத்திலிருந்தும் காப்பாற்றியதைப் பலமுறை உணர்ந்துள்ளேன். அத்தகைய அனுபவம், உலகியலில் உள்ள பொய்மையையும், மனிதர்களிடையே உள்ள பொய்மை அன்பையும், உண்மையான பரம்பொருளைப் புரிந்து கொண்டு மேன்மேலும் அந்தப் பரம்பொருளை நினைப்பதற்குமான ஓர் வாய்ப்பாகவே உணர முடிகிறது. அப்படியாகத் தங்களுக்கு ஏற்படும் சோதனைகள் ஒவ்வொன்றையும் இறைவன் நம்மைக் கடைத்தேற்றுவற்கே கொடுக்கிறார், நமது ஆன்மாவை மேம்படுத்துவதற்காகவே என்ற பார்வையில் எண்ணினால் இறைவனை நிச்சயம் எளிதில் அடையலாம்.

## அடியார்க்கு மட்டும் தான் இறைவன் அருள்புரிவாரா?

இத்தனைக்கும் மேலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், பக்தன் (அ) அடியார் என்ற இலக்கணத்திற் குள்ளே நுழையாத சிறியேனுக்கு இத்தகைய வாய்ப்புகள் எல்லாம் கிடைத்திருக்கிறது என்றால், உண்மையாகவே அடியார் என்ற இலக்கணத்துடன் இருப்பவருக்கு இறைவன் எத்தகைய அற்புதங்களை எல்லாம் நிகழ்த்தி இருக்கக்கூடும், நிகழ்த்தக் கூடும் என்பதை எண்ணி எண்ணி வியக்கிறேன். ஆக, திருவருளும், குருவருளும் கிடைப்பதற்கு, இலக்கணங்களைக் காட்டிலும் உண்மையான பக்தியோடு, மனசாட்சிப் படி நல்லவராகவும் இருக்க நினைத்தாலே போதும். காரணம், ஒருவன் முழுமையாக நல்லவராகவோ, முழுநேரம் உண்மை பக்தியுடனோ இருப்பது அத்தனை எளிதல்ல. எனவே, அதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டாலும் கூட போதுமானது நம் ஒவ்வொருவருக்கும் திருவருளும், குருவருளும் கைகூடும்.

## உங்களுக்கும் அற்புதங்கள் நடக்க வேண்டுமா?

எனக்குக் கிடைத்தாற் போலவே உங்களுக்கும் எண்ணற்ற

அற்புதங்கள் கிடைக்க வேண்டுமென்றால், உங்கள் வாழ்விலும் அற்புதங்கள் பல நடந்தேற வேண்டுமானால்,

இன்றே, இந்தக் கணமே திருவாசகம் படிக்கத் தொடங்குங்கள். அல்லது படிக்க முயற்சியாவது மேற்கொள்ளுங்கள்.

திருவாசகம் முழுமையும் படிக்க முடியவில்லையா?

சிவபுராணமாவது படிக்க வேண்டும்.

அதுவும் படிக்க முடியவில்லையா?

சிவபுராணம் அல்லது திருவாசகம் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டல் நல்லது.

அதுவும் முடியவில்லையா?

திருவாசக முற்றோதல் நடக்கும் இடத்திற்காவது செல்ல வேண்டும். அல்லது வழிபாடு நடக்கும் இடத்திற்காவது செல்லலாம்.

அதுவும் முடியவில்லையா?

அத்தகைய நிகழ்வுகளை ஒருங்கிணைப்போருக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

அதுவும் முடியவில்லையா?

அவர்களுக்கு மனதார வாழ்த்துக்களையாவது தெரிவித்து ஊக்கப்படுத்துங்கள்.

அதுவும் முடியவில்லையா?

அத்தகைய நிகழ்வுகள் குறித்து மற்றவர்களுக்காவது சொல்லுங்கள்.

அதுவும் முடியவில்லையா?

அத்தகைய செய்தியை நமது ஃபேஸ்புக், வாட்ஸப், டிவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற பல்வேறு சமூக வலைதள

பக்கங்களில் பகிர்ந்து நிகழ்ச்சி இனிதே நடைபெற நம்மால் இயன்ற உதவியைச் செய்யலாம்.

அதுவும் முடியவில்லையா?

நம்மால் இயன்ற சிறு நன்கொடையாவது, பொருளுதவி யாவது கொடுத்து உதவலாம்.

அதுவும் முடியவில்லையா?

இறைவனிடம் ஒரு நிமிடம் அத்தகைய நிகழ்வுகள் நல்ல முறையில் தொடர்ந்து நடைபெற பிரார்த்தனையாவது செய்வோம்.

இதில் ஏதாவது ஒரு முறையில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு சைவம் தழைக்கவும், ஆன்மீகம் ஓங்கவும், தமிழ் வளரவும், தலைமுறை பொலிவு பெறவும், ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற்றம் காணவும், இறைநிலையை அணுகவும், ஆன்மா கடைத்தேற்றம் பெறவும் துணை நிற்போமாக. இவையனைத்தும் ஒருநாள் செய்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு நாளும், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நம்மால் இயன்ற மேற்கண்ட செயல்பாடுகளுள் நம்மைத் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். சிவசிந்தனையோடு அனைத்து செயல்களிலும் முழு மனத்தோடு ஈடுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும.

**சிவனேன்னு இரு!**

நாம் அன்றாட வாழ்வில் அடிக்கடி சொல்லும் வார்த்தை சிவனேன்னு இருக்கேன். சில மாதங்களுக்கு முன்பு வரையில் அதை சும்மா இருக்கேன்னு சொல்வதற்கான பொருள் கொண்ட வார்த்தை என்றே நினைத்திருந்தேன். ஆனால், எல்லா நேரங்களிலும் சிவனே என்னும் சிந்தையில் மூழ்கியிருத்தலையே நம்முன்னோர்கள் மிக எளிய முறையில் தெரிவித்துள்ளார்கள் என்பதைப் புரிந்துகொண்ட பின்னர் எண்ணி எண்ணி வியக்கிறேன். அப்படியாக நாம் ஒவ்வொருவரும் சிவனேன்னு இருப்போம். சிவகதி பெறுவோம்.

## குருவருளும், திருவருளும்

குருவருளும், திருவருளும் எல்லா நேரங்களிலும், எல்லாச் சூழலிலும், எல்லாத் தன்மையினருக்கும், எல்லா மக்களுக்கும், கடவுள் உண்டு என்போருக்கும், கடவுள் இல்லை என்போருக்கும், கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற குழப்பத்தில் உள்ளோருக்கும், உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றி அருளை வாரி வழங்குவதற்கு எல்லா நேரங்களிலும் நமக்காகவே உள்ளார்கள். ஆனால், நாம்தான் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மை செம்மைப்படுத்திக்கொள்வதில்லை என்பதைப் பலமுறை பலரையும் பார்க்கும்போது உணர்ந்து வருந்தியுள்ளேன். காரணம், குருவையும், திருவையும் தரிசிக்கப் போகும் போதெல்லாம் ஒரு பெரிய பட்டியலைக் கொண்டு சென்று எதிர்பார்ப்புடன் காத்துநிற்கிறோம். இன்னும் புரியவேண்டுமென்றால் அருளைப் பெற வேண்டிய இருவரிடமும் பொருளைத் தேடிச் செல்லும் அவல நிலையையும், அத்தகைய தேவைகள் உடனடியாக நிறைவேற எண்ணுவதும், அப்படி உடனடியாக நிறைவேறாவிட்டால் அவர்களைத் தவிர்த்து புதிய குருவையும், திருவையும் தேடிச் செல்லும் அவல நிலையைப் பரவலாகக் காண்கிறேன். இன்னும் பலர் குருவையும் தாண்டிய சீடர்களாகவும், குருவிற்கே பாடம் சொல்லும் குருவாகவும், குற்றங்களைக் களையும் குருவிடமே குற்றம் காணும் பெரியவர்களாகவும் உள்ளது மனத்திற்கு வேதனை அளிப்பதாக உள்ளது.

குருவருளும், திருவருளும் ஒருவருக்கு உண்மையாகவே கிட்ட வேண்டுமானால், எண்ணத்தில் தூய்மை, மனத்தில் உறுதி, வழிபாட்டில் திண்ணம், உண்மையான, நம்பிக்கையுடன் கூடிய பக்தி, பக்தியில் நிலையான மனநிலை, நாம்தான் நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், தர்மத்தையும் தாங்கி நிற்கும் தூண் என்ற அகங்காரமற்ற நிலை நம் ஒவ்வொருவரிலும் வர வேண்டும். இதனைச் சொல்வதற்குக் காரணம், இன்றைய நிலையில் பலரும் குருவிடமும், திருவிடமும் எண்ணற்ற எதிர்பார்ப்புகளோடு சென்று

ஏமாற்றம் பெறும் போது, அவர்களை விமர்சிப்பதைக் காண்கிறேன். அத்தகைய மனநிலை கொண்ட ஒருவர் எப்படி உண்மையான பக்தராக இருக்க முடியும்? எப்படி அவர் எதிர்காலத் தலைமுறைகளை உருவாக்கும் ஓர் உத்தமராக முடியும்? எப்படி அவரைப் பார்த்து மற்றவர் இறைநிலை அடையமுடியும்? அத்தகைய நிலையை அவரே அடையமுடியாது என்ற போது?

இங்கே எனது சிற்றறிவிற்கு எட்டிய வகையில் குருவாக இருக்கட்டும், திருவாக இருக்கட்டும் உண்மையான பக்தி நிலை கொண்ட நாயன்மார்கள், அடியார்களுக்குத் தேடி வந்து அருள்புரிந்துள்ளார்கள். ஆம், தேடிவந்து வந்து அருள் புரிந்துள்ளார்கள்.

## திருவாசகம் எப்போதெல்லாம் படிக்கலாம்?

திருவாசகம் படிப்பதற்கும், இறைவனை வழிபடுவதற்கும் நேரம், காலம், இடம் என்று எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. உண்மையான அன்போடு எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த காலத்திலும் எப்போதெல்லாம் திருவாசகத்தைப் படிக்க எண்ணம் வருகின்றதோ அப்போதெல்லாம் படிக்கலாம். எவ்வித கட்டுப் பாடுகளும் கிடையாது.

## திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார், ஏன்?

திருவாசகத்தின் முதற்பதிகமான சிவபுராணத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் **சொல்லிய பாட்டின்பொருளுணர்ந்து சொல்லுவார்** என்று பாடியுள்ளதன் அடிப்படையில் எனது புரிதலுக்கேற்றபடி சொல்கிறேன். நாம் நினைத்தால் மட்டும் திருவாசகத்தைப் படித்துவிட முடியாது. அதற்கு இறைவன் அருளும், பெருங்கருணையும் வேண்டும். அப்படி அவர் நமக்கு அந்தப் பெருங்கருணையை வழங்கி நம்மைத் திருவாசகம் படிப்பதற்கு ஆட்படுத்துவாரேயானால், அதனைப் படிக்கும் போது நாம் பொருள்

புரிந்து படித்தால் நிச்சயம் மாணிக்கவாசகர் எப்படிக் கண்முன்னே கண்ட இறைவனைப் பிரிந்து வருந்திய தன்மையினால் பாடலைப் பாடினாரோ அத்தகைய தன்மை நம் மனத்தில் குடிகொள்ளும். அந்த நிலையிலிருந்து நாம் திருவாசகம் படித்தால் நமக்கும் அத்தகைய உருக்கம் ஏற்படும். ஆனால், எனது சிற்றறிவிற்கேற்ப புரிந்துகொண்ட வகையில் லட்சக்கணக்காணோர் திருவாசகத்தைப் படிக்கிறார்கள், பாடுகிறார் கள், கொண்டாடுகிறார்கள், கூத்தாடுகிறார்கள், ஆனந்தமாய்ப் போற்றுகிறார்கள், திருவாசகத்தை உயிர் மூச்சாகக் கொண்டாடு கிறார்கள், அதே சமயம் இறைவனின் உண்மைத் தன்மையை உணர மறுக்கிறார்கள்.

**இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசக நூல் வெளியீட்டில் உள்ள இடர்ப்பாடுகள்...**

2022 ஆகஸ்டு மாதம் தொடங்கிய முயற்சியானது **5,000** என்ற இலக்குடன் தொடங்கப்பட்டு குருவருளாலும், திருவருளாலும் **25,000** என்ற மிகப்பெரிய எண்ணிக்கையைக் கடந்துள்ளது. இது மிகப்பெரிய இலக்காகும். ஆனால் அதற்கேற்ற பொருளுதவி, நிதியுதவி எதிர்பார்த்த அளவில் கிடைக்கப் பெறவில்லை. இறைவன் என்று உணர்த்துகின்றாரோ அப்போது நிதியும், எண்ணிக்கையும் ஒரு பொருட்டே அல்ல என்ற உறுதிப்பாட்டுடன் உள்ளோம்.

திட்டமிட்டபடி அடக்கவிலையைக் காட்டிலும் பாதிக்கும் குறைவான விலையில் ரூ. 20 என்ற அளவில் தொடர்ந்து தரமான திருவாசக நூலாக கொடுக்க விரும்புகிறோம். அதற்கான நிபந்தனை யற்ற பேராதரவும், பொருளுதவியும், நிதியுதவியும் இதுவரையில் கிடைக்கவில்லை.

ஒரு சிலர் நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்ய முன் வந்தும்,அவர்களின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லாமையால் எங்களால் அவர்களின் உதவிகளைப் பெறஇயல வில்லை.

உடனிருந்த ஒருசிலர் எங்களின் பெருமுயற்சிகளுக்கு நாங்கள்நம்பிக்கை வைத்து எதிர்பார்த்த அளவில் சரிவர ஒத்துழைப்பு கொடுக்க முன்வர வில்லை. (காரணங்கள் இறைவனுக்குத் தான் தெரியும்)

ஒரு சில நேரங்களில் தாமதத்தின் உண்மையான காரணம் குறித்து நாங்கள் விளக்கிக் கூறுவதற்கு முன்னரே, ஒருசிலர் உண்மைத்தன்மைக்கு எதிரான தவறான தகவல்களை பல்வேறு வாட்சப் குழுக்களில் பகிர்ந்துள்ளமையால் எங்களின் முயற்சிக்கு அவை மேலும் பின்னடைவையே தந்துள்ளது.

**இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசக நூல் வெளியீட்டிற்கான தீர்வுகள்...**

இல்லங்கள் தோறும் எழுந்தருளும் திருவாசகம் என்ற இலக்கை எட்டும் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த எண்ணற்ற கசப்பான வார்த்தைகள், அனுபவங்கள், விமர்சனங்கள், குறுஞ் செய்திகள், வாட்சப் செய்திகள், மன உளைச்சல்கள், ஏமாற்றங்கள், இடர்ப்பாடுகள், தோல்விகள், பின்னடைவுகள், துரோகங்களைக் கடந்து மீண்டு வருவதற்கும், அவற்றிலிருந்து கற்றுக்கொண்ட அநுபவங்களின் அடிப்படையில் தொய்வுபெற்ற முயற்சியானது குருவருளும் திருவருளும் துணைநிற்க மீண்டும் புத்துயிர் பெற்று செயல்படுத்தத் தொடங்குவதற்கு எங்களுக்கு ஆன காலம் ஓராண்டாகும்.

இனிவரும் காலங்களில் ரூ.20 என்ற விலையில் ஒரு வருக்கு ஒரு நூல் மட்டுமே என்ற அடிப்படையில் தங்கு தடையின்றிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

இல்ல சுபநிகழ்ச்சிகள், திருமணங்கள், கும்பாபிஷேகம், திருவாசக முற்றோதல் விழாக்களுக்கு சிறப்புத் தொகையை நன்கொடையாகப் பெற்றுக்கொண்டு 10 பிரதிகள் முதல்

எண்ணற்ற பிரதிகள் வரையில் உடனடியாக பத்திரிக்கையுடன் அச்சிட்டுத் தர ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

எண்ணற்ற ஆன்மீக மெய்யன்பர்கள், தொண்டுள்ளம் கொண்டோர், நன்கொடையாளர்களைத் தொடர்புகொண்டு உதவிகள் குறித்து நாடி வருகின்றோம்.

திருவாசக நூல் வெளியிட வாய்ப்பளித்த இறைவன், திருவாசகம் படித்தால் என்ன கிடைக்கும் என்ற ஒரு தன்னிலை விளக்க நூல் வெளியிடவும் வாய்ப்பளித்துள்ளது. திருவாசக நூலை மேலும் அதிக எண்ணிக்கையில் அச்சிட ஏதுவாக அமையும் என்பதற்கே.

**திருவாசகம் எங்கே, எப்போது, யாரெல்லாம் படிக்கலாம்?**

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க** என்ற வரிகள் திருவாசகத்தைப் படிப்பதற்கு என்று வயது, இடம், காலம், நேரம், போன்ற எவ்விதக் கட்டுப்பாடுகளும் தேவையல்ல என்பதைத் தெளிவுற உணர்த்துகிறது. பேரானந்தப் பெருநிலையை அடைய விரும்பும் ஒவ்வொருவரும் திருவாசகம் படிக்கலாம்.

**விரைவில் செயல்படுத்த முயன்றுவரும் முன்னெடுப்புகள்...**

**2023 இறுதிக்குள்ளாவது 50,000 பிரதிகள் என்ற இலக்கை அடைவதற்குத் தீவிரமாக முயன்று வருகிறோம்.**

இரண்டு ஆண்டுகளாகத் தொடங்குவதற்கு முயற்சி செய்து வரும் **அவசரமில்லாத இலவச ஆம்புலன்ஸ் சேவையை** உடனடியாகத் தொடங்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

மெட்டீரியல் வாங்கிக்கொடுக்கும் **அரசுப் பள்ளி, கல்லூரி மாணவியர் சுமார் 100 பேருக்கு இலவசமாக சுடிதார் தைத்துத் தருவதற்கு** ஏற்பாடுகள் செய்துவருகிறோம்.












MANKIND & ENVIRONMENT EFFLORESCENCE TRUST




முப்பெரும் விழா




meet


முப்பெரும் விழா


meet






meet










முப்பெரும் விழா


























































ஸ்ரீ சாந்த சபா பவனம்












திருப்பணி.காம்
meet
திருவாசகத் திருவிழா
திருவிடைமருதூர்
ஈசன் புகழ்
பாடிடுவோம்
000


திருப்பணி.காம்
meet


நாதன்தாள் வாழ்க!


திருப்பணி.காம்
meet
நாதன்தாள் வாழ்க!














இடைமருதில்



வாசகத்
2022
















திருவாசகம்












































































திருவாசகத் திருவிழா
meet


நமச்சிவாய வாழ்க!
திருப்பணி.காம்








திருவாசகத்


திருப்பணி.காம்








திருப்பணி.காம்
பிரதிகள்


திருப்பணி.காம்






meet
திருவாசகத் திருவிழா












































































திருப்பணி.காம்
meet
திருவாசகத் தேனமுதம்
கும்பகோணம்
WWW.THIRUVASAGAM.IN























































































































திருப்பணி.காம்
meet


திருப்பணி.காம்
meet
































திருவாசக முற்றோதல் ஞான வேள்விப் பெருவிழா
தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா நூற்றாண்டு விழா












முப்பெரும் விழா


பெருவிழா
கருத்தரங்கம்




முப்பெரும் விழா
பெருவிழா


கருத்தரங்கம்


வேள்விப் பெருவிழா


ஐயா நூற்றாண்டு விழா
கருத்தரங்கம்


வாய்மொழி – கருத்தரங்கம்


வேள்விப் பெருவிழா




பெருவிழா
கருத்தரங்கம்
மணி முதல்


திருவாசக முற்றோதல்
தருமபுரம் ப. சுவாமிநாதன்




meet
விழா
கருத்தரங்கம்


திருவாசக முற்றோதல் ஞான
தருமபுரம் ப. சுவாமிநாதன் ஐயா


முப்பெரும்


















meet


meet


முப்பெரும் விழா










meet
விரிவுரை

meet
விரிவுரை


















meet
திருக்குடந்தைப்புராணம்
தொடர் விரிவுரை










திருவாசக முற்றோதல்
www.thiruvasagam.in
















தமிழ்த்தாய்



संसद के नवनिर्मित भवन का लोकार्पण












विश्व हिन्दू परिषद
केन्द्रीय कार्यालय जाने का मार्ग





































































































Raya's
Group of Hotels










































25000






















PRAYER / MEDITATION HALL


www.thiruvasagam.in
















இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி
மாபெரும் இலவச
தைராய்டு பரிசோதனை முகாம்




KUMBAKONAM BRANCH






TAMIL NADU FIRE AND RESCUE SERVICE




இந்தியன் ரெட்கிராஸ்
சொசைட்டி
திருவிடைமருதூர் வட்டம்












மாபெரும் இலவச
சித்த மருத்துவ
முகாம்


மாபெரும் இலவச
சித்த மருத்துவ முகாம்
இந்தியன் ரெட்கிராஸ்
சொசைட்டி
திருவிடைமருதூர் வட்டம்














இந்தியன் ரெட்கிராஸ்
சொசைட்டி
திருவிடைமருதூர் வட்டம்


மாபெரும் இலவச
சித்த மருத்துவ
முகாம்













meet












RI EERAMAKALIY MMAN THIRUKO












GOREGAON MALAD SAMITHI NO: 4/5 MUMBAI




பாரதத் திருநாட்டின் புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் ஒருங்கு சங்கமித்த சமயச் சான்றோர்கள், அருளாளர்கள், ஞானச்சுடர் விளக்குகள் மற்றும்
அரசியல் மீயுயர் பதவிச் செம்மல்கள் கூட்டமர்வில்.... சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்திச் சிந்தையும், உடலும் மாறிலா மகிழ்ச்சி அடைகிறோம்.

















meet
A Truly Service Network

# மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை



# மறுமணம் சந்திப்பு

துணிவே துணை ! துணையே துணை !



## இதயங்களின் சங்கமம்! இல்வாழ்வின் ஆரம்பம்!!

கொரோனா பெருந்தொற்று காரணமாக வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள், பிற காரணங்களால் கணவரை (அ) மனைவியை இழந்தவர்கள் / விவாகரத்தானவர்கள் / வயது மூப்பு உடையவர்கள் மாற்றுத்திறனாளிகள் / வெண்புள்ளி உடையவர்கள் / வசதி குறைவால் திருமணம் தடைபட்டுள்ளவர்கள் மறுமணம் / முதல் மணம் வரன் தேடுவோர் வாழ்வில் ஒளியேற்றுவதற்கான ஓர் முயற்சி !!

**ஒருமுறை சேவைக் கட்டணம் உண்டு***

முன்பதிவு செய்ய விரும்புவோர் ஜாதகம், சுயவிபரம்,
புகைப்படம் அனுப்ப வேண்டிய வாட்சப் எண்கள்

# 9489089102 / 9488689102

துணையை இழந்தவர்களுக்குத் துணையாக நிற்கத் தயாராக உள்ள அனைத்துச் சமுதாயத்தினரும், அனைத்து வயதினரும் பங்குபெறலாம்

ஆன்லைன் மூலமாக முன்பதிவு செய்ய

# www.marumanam.co.in

முன்பதிவு செய்ய விரும்புவோர் ஜாதகம், சுயவிபரம்,
புகைப்படம் அனுப்ப வேண்டிய முகவரி

**மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை**
33 / 17, நாகேஸ்வரன் சன்னதித் தெரு, கும்பகோணம் - 612001.

அலுவலக வேலை நாட்கள் மற்றும் நேரம் :

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.30 முதல் மாலை 5.30 வரை

Promoted by www.amudhan.in / Cell : 9443028343

★ நிபந்தனைகளுக்குட்பட்டது. வியாபார நோக்கமற்றது.



அமுதன் விளம்பர நிறுவனம்
தொகுத்து ( அ ) வடிவமைத்து
வெளியிடப்பட்டுள்ள நூல்கள்
மற்றும் விழா மலர்கள்
திருவாசகம்
திருவாசகம்
சிவபுராணம்
கோளறு திருப்பதிகம்
அமுதன்
மாங்கனி
சுதந்திரம்
அபிராமி அந்தாதி
சைவ சமயப் பெருவிழா
சென்னை தமிழ்ச் சங்கம்
MGR 100
1917-2017
CHENNAI TAMIL SANGAM
காதலொடு காதலாகி
பழைய மாணாக்கர் சங்கம்
தம்பிரான் தோழர்
meet
1000
வள்ளுவர் கண்ட காட்சி
OLD STUDENTS ASSOCIATION
TOWN HIGHER SECONDARY SCHOOL
சென்னை தமிழ்ச் சங்கம்